தினமணி

28-ல் வெள்ளாடு வளர்ப்புப் பயிற்சி
First Published : 26 Aug 2012 11:37:20 AM IST

திருப்பூர், ஆக. 25: திருப்பூர் கால்நடை மருத்துவப் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் வெள்ளாடு மற்றும் நாட்டுக்கோழி வளர்ப்பு குறித்த பயிற்சி அளிக்கப்படுகிறது.
÷இது குறித்து அதன் தலைவர் இரா. செல்வராஜ் வெளியிட்ட செய்திக்குறிப்பு:
÷கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகத்தின் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் ஆகஸ்ட் 28-ம்தேதி வெள்ளாடு வளர்ப்பு குறித்தும், ஆகஸ்ட் 30-ல் நாட்டுக்கோழி வளர்ப்பு முறை குறித்தும் பயிற்சி அளிக்கப்படுகிறது.
÷காலை 10 மணி முதல் 4 மணி வரை நடைபெறும் இப்பயிற்சி முகாமில், திருப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த விருப்பமுடைய நபர்கள் பங்கேற்கலாம். மேலும் விவரங்களுக்கு, 0421- 2248534 என்ற எண்ணில் முன்பதிவு செய்துகொள்ளலாம் என்றார்.

பயிர் காப்பீடு செய்ய அழைப்பு
First Published : 26 Aug 2012 11:38:55 AM IST

பெரம்பலூர், ஆக. 25: பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் பங்கேற்று பயன்பெற வேண்டும் என்றார் பெரம்பலூர் மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் மண்டல இணைப் பதிவாளர் எம். முருகன்.
பெரம்பலூர் அருகே வாலிகண்டபுரம் ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத்தில் கிரிப்கோ கூட்டுறவு உர நிறுவனம் மற்றும் ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையம் சார்பில் விவசாயிகளுக்கான கலப்பின வீரிய பருத்தி மற்றும் மக்காச்சோள சாகுபடி கருத்தரங்கு வெள்ளிக்கிழமை நடைபெற்றது.
கருத்தரங்கைத் தொடக்கிவைத்த அவர் மேலும் பேசியது:
தொடக்க வேளாண்மை சங்கங்களின் மூலமாக சரியான விலையில் தரமான உரங்களையும், விதைகளையும் விவசாயிகள் பெற்று பயனடையலாம். தற்போது நிலவி வரும் பாதகமான வானிலையைக் கருத்தில் கொண்டு, அனைத்து விவசாயிகளும் பயிர் காப்பீடுத் திட்டத்தில்

இணைந்து பயன்பெறுவதோடு, ஒருங்கிணைந்த முறையில் களை, பூச்சி, நோய் மற்றும் பயிர் மேலாண்மைகளைக் கடைப்பிடித்தால் கூடுதல் வருமானம் பெறமுடியும் என்றார் அவர்.
கிரிப்கோ நிறுவன தூத்துக்குடி மண்டல மேலாளர் எஸ். அருணாச்சலம், ரோவர் வேளாண்மைக் கல்லூரி உழவியல் துறைப் பேராசிரியர் ஏ. சீத்தாராமன்,
திருச்சி மண்டல கிரிப்கோ உதவி மேலாளர் மு. ஜகநாதன் மற்றும் விவசாயிகள் பங்கேற்றனர்.
பருத்தி சாகுபடி குறித்த நவீன தொழில்நுட்பங்களான நடவு முறைகள், நுண்ணூட்ட மேலாண்மை, பூச்சி மேலாண்மை, நோய் மேலாண்மை, நடவு முறையை மாற்றி, அதிக மகசூலுடன் நிகர லாபம் பெறும் தொழில்நுட்பம் குறித்து ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மைய பருத்தி திட்ட முதுநிலை ஆய்வாளர் ப. சரவணன் விளக்கினார்.
ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத் திட்ட ஒருஙகிணைப்பாளர் (பொறுப்பு) ஜெ. கதிரவன் வரவேற்றார். கிரிப்கோ உதவி மேலாளர் மு. ஜகநாதன் நன்றி கூறினார்.

## கொப்பரை குறைந்தபட்ச விலையை உயர்த்த பரிந்துரை

First Published : 26 Aug 2012 11:37:22 AM IST

தஞ்சாவூர், ஆக.25: கொப்பரை தேங்காய்க்கு கிலோவுக்கு ரூ.51 வழங்க மத்திய அரசுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.
தஞ்சை மாவட்ட தென்னை விவசாயிகள் அமைப்புத்தலைவர் குருவிக்கரம்பை ஆ. பழனிவேல் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பது,
தேங்காய் விலை குறைவால் தென்னை விவசாயிகள் சந்திக்கும் பொருளாதார சீர்கேடுகளை அரசின் கவனத்திற்கு கொண்டு செல்ல பேராவூரணியில் ஜூலை 25-ம் தேதி விவசாயிகள் கூட்டம் நடைபெற்றது.
இந்தக் கூட்டத்தில் மத்திய நிதித்துறை இணை அமைச்சர் எஸ்.எஸ். பழநிமாணிக்கம், இந்திய அரசு தென்னை வளர்ச்சி வாரிய தலைவர் டி.கே. ஜோஸ் ஆகியோர் பங்கேற்றனர்.
கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் தென்னை வளர்ச்சி வாரிய தலைவர் டி.கே.ஜோஸ் மூலம் அனுப்பி வைக்கப்பட்டது.
இக்கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுமென வலியுறுத்தி அவர், இந்திய விவசாயத்துறை, இந்திய விவசாய விலைப் பொருள்களின் விலை நிர்ணய கமிஷன் ஆகியோருக்கு பரிந்துரை செய்து கடிதம் அனுப்பியுள்ளார். அந்த கடித விபரம் வருமாறு, 2011-ம் ஆண்டு விலைவாசி அடிப்படையில் கொப்பரை கிலோ ரூ.51 என குறைந்தபட்ச விலையை மைய அரசு நிர்ணயித்துள்ளதை உயர்த்திட வேண்டும். தேங்காய் எண்ணெய்க்கு உரிய விலை கிடைக்கும் வகையில் பாமாயில் இறக்குமதி வரியை 7.5சதத்திலிருந்து 10சதமாக வணிக அமைச்சகம் உயர்த்த வேண்டும்.

அந்தந்த மாநில அரசுகள் தகுதியான தேங்காய்களை கொப்பரையாக்கும் மையங்களை உடனடியாக தேவைக்கு ஏற்ப உருவாக்கிட வேண்டும் ஆகிய கோரிக்கைகள் அரசுக்கு வலியுறுத்தப்பட்டுள்ளதாக அறிக்கையில் ஆ.பழனிவேல் தெரிவித்துள்ளார்.

## விவசாயிகளுக்கு செயல் விளக்கப் பயிற்சி

First Published : 26 Aug 2012 10:22:26 AM IST

தேனி, ஆக. 25: தேனி அருகே வெங்கடாசலபுரத்தில் கால்நடைகளுக்கு தேவையான நுண்ணுயிர் கலவை அளிப்பது குறித்து மதுரை விவசாயக் கல்லூரி மாணவிகள் விவசாயிகளுக்கு செயல் விளக்கப் பயிற்சி அளித்தனர்.

சென்டெக்ட் வேளாண்மை அறிவியல் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர், மாணவிகள் சீதாலட்சுமி, செல்லக்கிளி ஆகியோர் பேசுகையில், கால்சியம், பாஸ்பரஸ், மெக்னீசியம், இரும்புச் சத்து, தாதுக்கள் அடங்கிய நூண்ணுயிர் கலவையை கறவை மாடு, சினை மாடு, காளை மாடு, வண்டி இழுக்கும் மாடு ஆகிவற்றுக்கு 30 முதல் 40 கிராம், கன்றுகளுக்கு 5 கிராம் என்ற விகிதத்தில் கொடுக்கலாம். இதனால் கறவை மாடுகளின் பால் உற்பத்தி திறன் அதிகரிக்கும். மாடுகள் ஆரோக்கியத்துடன் காணப்படும் என்றனர்.

கால்நடைகளுக்கான தீவனப் பயிர் உற்பத்தி குறித்து மாணவிகள் ஜீவிதா, பிரித்திவி, ரேவதி, சாலைச் சித்ரா, சக்தி, உமாபிரியா உள்ளிட்டோர் விசாயிகளுக்கு விளக்கினர்.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

## தென்னை விவசாயிகளுக்கு ஆலோசனை:"ஆத்மா' குழுக் கூட்டத்தில் முடிவு

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 26,2012,06:30 IST

கடலூர்:"தானே' புயலால் பாதிக்கப்பட்டு தற்போது தென்னங்கன்று நடவுள்ள விவசாயிகளுக்கு உரிய தொழில் நுட்ப ஆலோசனை வழங்க ஆலோசனைக் கூட்டத்தில் முடிவு öŒ#யப்பட்டது.மாவட்ட வேளாண்மை தொழில் நுட்ப மேலாண்மைக் (ஆத்மா) குழு கூட்டம் கடலூரில் நடந்தது. கலெக்டர் ராஜேந்திர ரத்னு தலைமை தாங்கினார். வேளாண் இணை

இயக்குனர் ராதாகிருஷ்ணன், துணை இயக்குனர் சந்திரமோகன், கலெக்டரின் நேர்முக உதவியாளர் அசோகன், வேளாண் அலுவலர் பூவராகவன், விரிவாக்க அலுவலர் சங்கரசேகர், வேளாண் அறிவியல் மையம், கரும்பு ஆராய்ச்சி நிலையம், கால்நடைத்துறை, தோட்டக்கலை துறை அதிகாரிகள் விவசாயிகள் சங்கத்தின் சார்பில் சம்பந்தம், வேல்முருகன், தனஇளங்கோ பங் கேற்றனர்..

கூட்டத்தில், "தானே' புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் விவசாயிகளுக்கு தென்னங்கன்று வழங்கப்பட்டு, நடவு பணி நடைபெற உள்ளது. எனவே, தென்னை விவசாயிகளுக்கு தொழில் நுட்ப ஆலோசனைகள் வழங்கவும், ஆத்மா சார்பில் உரிய பயிற்சி அளிக்கவும், மணிலா சாகுபடி தொழில் நுட்பங்களை அறிந்து கொள்ள குஜராத்திற்கும், நெல் சாகுபடி தொழில் நுட்பங்களை அறிந்து கொள்ள பஞ்சாபிற்கு விவசாயிகளை அழைத்துச் செல்ல கலெக்டர் அனுமதி வழங்கினார்.

**நுகர்வோர் நலனே முக்கியம்...கோதுமை கொள்முதல் விலை உயர வாய்ப்பில்லை- பிசினஸ் ஸ்டாண்டர்ட் உடன் இணைந்து -**



வரும் 2013ம் ஆண்டு ஏப்ரலில் தொடங்கும் சந்தைப் பருவத்தில், கோதுமைக்கான குறைந்த பட்ச ஆதரவு விலையை உயர்த்துவது குறித்து, வேளாண் செலவினம் மற்றும் விலைகள் ஆணையம்(சி.ஏ.சி.பி), மத்திய அரசுக்கு பரிந்துரை எதுவும் செய்யவில்லை.இதனால், நடப்பு 2012-13ம் சந்தைப் பருவத்திற்கு, கோதுமைக்கு நிர்ணயிக்கப்பட்ட, குறைந்த பட்ச ஆதரவு விலையே, வரும் ஆண்டிற்கும் நீடிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.
எனினும், இது குறித்த இறுதி முடிவு எடுக்கும் அதிகாரம், மத்திய அமைச்சரவைக் குழுவிற்கே உள்ளது.உரிய விலை:விவசாயிகள் பாடுபட்டு விளைவிக்கும் வேளாண்பொருட்களுக்கு, உரிய விலை கிடைக்க வேண்டும் என்ற நோக்கில், மத்திய அரசு விளை பொருட்களை நேரடியாக கொள்முதல் செய்து வருகிறது. இதற்காக, விளைபொருட்களுக்கு, குறைந்தபட்ச ஆதரவு விலை நிர்ணயிக்கப்படுகிறது. இந்த விலையுடன், மாநில அரசுகளும் கூடுதலாக ஊக்கத் தொகை

வழங்குகின்றன.இவ்வாறு கொள்முதல் செய்யப்படும் விளைபொருட்கள், பொது வினியோக திட்டத்தின் கீழ், பொதுமக்களுக்கு வினியோகம் செய்யப்பட்டு வருகின்றன. இத்தகைய நடைமுறை மூலம், விவசாயிகள், இடைத்தரகர்களின் இடையூறின்றி, தங்கள் விளைபொருட்களுக்கு உரிய விலையை பெற முடிகிறது.

பொதுவாக, ஜூன் மாதம் தொடங்கும் பயிர் பருவத்தில் விளையும் கோதுமை, அடுத்த ஆண்டு ஏப்ரலில் தொடங்கும் சந்தைப்படுத்தும் பருவம் வரை விற்பனைக்கு வரும்.

சந்தை பருவம்:மத்திய அரசு, ஆண்டுதோறும் கோதுமை சந்தைப்படுத்தும் பருவத்திற்கான (ஏப்ரல்-மார்ச்) குறைந்தபட்ச ஆதரவு விலையை, உற்பத்தி, தேவை அடிப்படையில் முன்னதாகவே அறிவிக்கும்.

இந்நிலையில், கடந்த ஐந்து பயிர் பருவங்களாக, கோதுமை உற்பத்தி அதிகரித்து வந்ததை அடுத்து, அதன் குறைந்தபட்ச ஆதரவு விலை ஆண்டுதோறும் அதிகரிக்கப்பட்டு வந்தது.

சென்ற 2011-12ம் சந்தைப்படுத்தும் பருவத்தில், ஒரு குவிண்டால் கோதுமை கொள்முதல் விலை, 1,120 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டது. இதனுடன் ஊக்கத்தொகை 50 ரூபாய் சேர்த்து, மொத்தமாக 1,170 ரூபாய் விவசாயிகளுக்கு கிடைத்தது.கொள்முதல் விலை உயர்வால் ஊக்கமடைந்த விவசாயிகள், அதிக பரப்பில் கோதுமையை பயிரிட்டனர். சென்ற பயிர்பருவத்தில் கோதுமை உற்பத்தி, சாதனை அளவாக 9.20 கோடி டன்னை தாண்டியது.

இதையடுத்து, நடப்பு 2012-13ம் சந்தைப்படுத்தும் பருவத்திற்கான கோதுமை கொள்முதல் விலை, 1,285 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டது.இந்நிலையில், சர்வதேச சந்தையில் கோதுமை விலை குறைந்துள்ளதாலும், உள்நாட்டில் பணவீக்கம் அதிகரித்துள்ளதாலும், வரும் 2013-14ம் சந்தைப்பருவத்தில், கோதுமைக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை உயர்த்த, சி.ஏ.சி.பி., மத்திய அரசுக்கு பரிந்துரைக்கவில்லை என்று கூறப்படுகிறது.

ஏற்றுமதிக்கு தடை:எனினும், கோதுமை ஏற்றுமதிக்கு தடை விதிக்கும் பட்சத்தில், அதன் குறைந்தபட்ச ஆதரவு விலையை, 10 சதவீதம் உயர்த்தலாம் என்றும் சி.ஏ.சி.பி., தெரிவித்துள்ளது. அவ்வாறு உயர்த்தப்படும் பட்சத்தில், வரும் நிதியாண்டில், மத்திய அரசின் மானியச் சுமை மேலும் அதிகரிக்கும் என, அரசு அதிகாரிகள் தெரிவித்தனர். நடப்பு நிதியாண்டில், மத்திய அரசின் மானியச் சுமை, 75 ஆயிரம் கோடி ரூபாயாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.சர்வதேச சந்தையில், ஒரு டன் கோதுமை விலை 230-240 டாலராக உள்ளது. இது, ஒரு டாலர் 55 ரூபாய் என்ற மதிப்பில் கணக்கிடும்போது, 12,742 - 13,290 ரூபாய் என்ற அளவில் உள்ளது. ஆனால், உள்நாட்டு சந்தையில், இதை விட அதிகமாக, அதாவது, ஒரு டன் கோதுமை, 13 ஆயிரம் ரூபாய் என்ற அளவில் விற்பனையாகிறது.இதனால், கோதுமை ஏற்றுமதியில், லாபம் மிகவும் சொற்பமாக உள்ளது என, ஏற்றுமதியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆகஸ்ட் 27,2012,00:59

**'ஈமு' விளம்பரங்களை அகற்ற நடவடிக்கை**



ஈரோடு:சீல் வைக்கப்பட்ட, 'ஈமு' நிறுவனங்களின் விளம்பர பலகைகளை அகற்றும் பணியில் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.ஈரோடு மாவட்டத்தில், ஏழு ஆண்டுகளாக, 54 நிறுவனங்கள் ஈமு கோழி வளர்ப்பு மூலம் ஏராளமானோரிடம் பல கோடி ரூபாய் வசூலித்துள்ளன. மேலும், நாட்டுக்கோழி வளர்ப்பு, அகர் மரம் வளர்ப்பு, லேண்ட் புரமோட்டர்ஸ்... என, பல பெயர்களில் தனியார் நிறுவனங்கள், மக்களிடம் இருந்து, பல கோடிகளை முதலீடாக பெற்று உள்ளன.
ஈமு கோழி வளர்ப்பு மோசடி வெளிச்சத்துக்கு வந்ததை அடுத்து, ஈமு, நாட்டுக்கோழி பண்ணை உரிமையாளர்கள் பலர் தலைமறைவாகி விட்டனர். 1,000 கோடி ரூபாய் வரை மோசடி நடந்துள்ளதாக, 3,000 பேர் காவல்துறையிடம் புகார் செய்துஉள்ளனர்.ஈமு மற்றும் நாட்டுக்கோழி நிறுவனங்களிடம், ஈரோடு மாவட்ட மத்திய, மாநில அரசு துறையினர், பல உதவிகளைப் பெற்றுள்ளனர். உதாரணமாக, போக்குவரத்தை சரி செய்யும் வகையில் ஏராளமான பேரிகார்டுகள், பயணிகள் நிழற்குடைகள், போக்குவரத்து சிக்னல்கள் ஆகியவை, ஈமு கோழி நிறுவன விளம்பரத்துடன் மாவட்டம் முழுவதும் காவல்துறையினரால் வைக்கப்பட்டன. சாலையின் மத்தியில் உள்ள தடுப்பு சுவர்கள், பூங்காக்கள், ரயில் நிலையம் உள்ளிட்ட இடங்களிலும், ஈமு நிறுவனங்களின் விளம்பரங்கள் இடம் பெற்றன.
'ஈமு போன்ற நிறுவனங்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்' என முதல்வரே நேரடியாக அறிவித்துள்ள நிலையில், ஈரோடு, திருப்பூர் மாவட்டங்களில், அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களால் பயன்படுத்தப்படும் அறிவிப்பு பலகைகளில், ஈமு கோழி நிறுவன விளம்பரங்கள் இன்னும் அகற்றப்படாமல் உள்ளன.'ஈமு கோழி நிறுவனங்கள் வழங்கிய பேரிகார்டுகள் சில இடங்களில்தான் உள்ளன. அவற்றை அகற்ற ஏற்பாடு செய்யப்படும்' என, ஈரோடு போக்குவரத்து பிரிவு டி.எஸ்.பி., ராஜு தெரிவித்தார். ஆர்.டி.ஓ., சுகுமார், 'ஈமுகோழி, டி.என்.பி.எஸ்.சி., பிரச்னை

போன்றவற்றால், ஆர்.டி.ஓ.,வின் வழக்கமான பணிகள் பாதித்துள்ளன. விளம்பர போர்டுகளை விரைவில் அகற்றுவோம்' என்றார்.

ஆகஸ்ட் 27,2012,00:54

**இஞ்சி விலை கிடுகிடு...**



ஈரோடு:இஞ்சி வரத்து குறைந்துள்ள நிலையில், தேவை அதிகரித்துள்ளதால் இதன் விலை கிலோவுக்கு, 20 முதல் 45 ரூபாய் வரை உயர்ந்துள்ளது.நடப்பாண்டு, பெய்த கோடை மழையால், இஞ்சி உற்பத்தி கடுமையாக பாதித்து, அதன் வரத்து கணிசமாக குறைந்துள்ளது. ஊறுகாய் தயாரிப்பில் இஞ்சி பயன்பாடு அதிகம் உள்ளதால் விலையும் கிடுகிடுவென அதிகரித்து வருகிறது.சில மாதங்களுக்கு முன், 55 கிலோ எடை கொண்ட ஒரு மூட்டை இஞ்சியின் விலை, 1,375 ரூபாயாக இருந்தது.

இது, தற்போது 3,850 ரூபாயாக உயர்ந்துள்ளது. ஊறுகாய்க்கு பயன்படும் மா இஞ்சி, 3,300 ரூபாயில் இருந்து, 4,400 ரூபாயாக அதிகரித்துஉள்ளது.ஈரோடு, இஞ்சி கமிஷன் மண்டி உரிமையாளர் ஒருவர் கூறியதாவது:நடப்பாண்டு கோடையில் பெய்த பலத்த மழையால் உற்பத்தி பாதித்தது. தென்மேற்கு பருவமழையால், இஞ்சி சாகுபடி பரப்பையும் விவசாயிகள் குறைத்தனர். இதனால், மண்டிகளுக்கு வரத்தும் கணிசமாக குறைந்து விட்டது.கறிமசாலாவுக்கும், ஊறுகாய் தயாரிக்கவும் இஞ்சி அதிகமாக பயன்படுகிறது. தவிர, சித்தா மற்றும் யுனானி மருத்துவத்திலும் பயன்படுத்தப்படுகிறது.

தேவை அதிகரித்துள்ளதால், இஞ்சி விலை உயர்ந்து விட்டது. இவ்வாறு அவர் கூறினார்.

ஆகஸ்ட் 27,2012,00:52

**ஓணம் விற்பனைக்காக 20,000 கிலோ வாடா மல்லி**



திண்டுக்கல்:கேரளாவில் கொண்டாடப்படும் ஓணம் பண்டிகைக்காக, திண்டுக்கல் வாடா மல்லி பூக்கள் அனுப்புவது அதிகரித்துள்ளது.கேரளாவில் வரும் ஆக., 29ல் ஓணம் கொண்டாடப்படுகிறது. இதற்காக திண்டுக்கல் மாவட்டத்தில் இருந்து, ஏராளமான வாடாமல்லி பூக்கள் அனுப்பப்படுகின்றன. தினமும் 15 மினி லாரிகளில், 20 ஆயிரம் கிலோ வரை பூக்கள் அனுப்பப்படுகின்றன. ஒரு கிலோ வாடா மல்லி, 50 முதல் 100 ரூபாய் வரை விற்கப்படுகிறது.திண்டுக்கல் பூ மார்க்கெட் பொருளாளர் சகாயம் கூறியதாவது:ஓணம் பண்டிகைக்கு இங்கிருந்து வாடா மல்லி பூக்கள் மட்டுமின்றி செண்டுமல்லி, அரளி, மரிக்கெழுந்து பூக்களும் விற்பனையாகின்றன. கேரளாவில் மழை குறைவாக இருந்தாலும் ஓணம் பண்டிகையையொட்டி, பூக்கள் வாங்குவது குறையவில்லை, என்றார்.

ஆகஸ்ட் 25,2012,00:10

**நச்சுப்பொருள் கலப்பு எதிரொலி... இந்திய இறால் இறக்குமதிக்கு ஜப்பான் தடை?**



இந்திய இறால்களில், "எதாக்ஸிக்யுன்' என்ற நச்சுப் பொருளின் அளவு, நிர்ணயிக்கப்பட்டதை விட அதிகமாக உள்ளதால், இதன் இறக்குமதிக்கு தடை விதிப்பது குறித்து ஜப்பான் பரிசீலித்து வருகிறது.

**பண்ணை இறால்கள்:**கடந்த சில ஆண்டுகளாக, இந்தியாவில் இருந்து, அதிக அளவிலான கடல் உணவுப் பொருள் கள் ஜப்பான் நாட்டிற்கு ஏற்றுமதியாகி வருகின்றன. அவற்றில் "பிளாக் டைகர்' எனப்படும் பண்ணை இறால்களில், 60 சதவீதம், ஒடிசா மற்றும் மேற்குவங்கத்தில் இருந்து ஏற்றுமதியாகின்றன.இந்த இறால் வகைகளில், "எதாக் ஸிக்யுன்' என்ற நச்சுப் பொருள், நிர்ணயிக்கப்பட்ட அளவை விட அதிகம் உள்ளதாக ஜப்பான் குற்றம்சாட்டி யுள்ளது. இதைத் தொடர்ந்து, அண்மையில், இந்தியா ஏற்றுமதி செய்த 10க்கும் மேற்பட்ட இறால் சரக்குப் பெட்ட கங்களை ஜப்பான் நிராகரித்து விட்டது. இதனால், ஏற்றுமதியாளர்கள் மற்றும் இறால் பண்ணையாளர்கள் கடுமையான இழப்பை சந்தித்துள்ளனர்.

இது குறித்து, இந்திய கடல் உணவுப் பொருட்கள் ஏற்றுமதியாளர்கள் கூட்டமைப்பின் தலைவர் ஜி.மொகன்தி கூறும்போது, "ஜப்பான், முன்னறிவிப்பின்றி "எதாக்ஸிக்யுன்' தொடர்பான சோதனையை துவக்கியுள்ளது. இது குறித்து, இந்திய அரசுக்கோ அல்லது ஏற்றுமதியாளர்களுக்கோ முன்னதாக தகவல் ஏதும் தெரிவிக்க வில்லை. ஜப்பான் எடுத்துள்ள நடவடிக்கையால், மேற்குவங்கம் மற்றும் ஒடிசா மாநிலங்களில், கடல் உயிரின வளர்ப்புத் துறை, பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, இறால் விலை, கடுமையாக வீழ்ச்சி கண்டுள்ளது' என்று தெரி வித்தார்.

**பாதிப்பு:**இத்தகைய போக்கால், வரும் ஆண்டுகளில், பண்ணை இறால் வளர்ப்பு துறை, உற்பத்தியை மேற் கொள்ள முடியாத நிலை ஏற்படும் என, அவர் மேலும் கூறினார்.இந்தியாவில் இருந்து ஏற்றுமதியான இறால் களை ஜப்பான் ஏற்க மறுத்த நிலையில், ஏற்கெனவே அளிக்கப்பட்டிருந்த ஏராளமான "ஆர்டர்'களும் ரத்து செய் யப்பட்டுள்ளன.மேலும், இந்திய இறால்களின் இறக்குமதிக்கு நிரந்தர தடை விதிக்கவும் ஜப்பான் திட்டமிட் டுள்ளதாக கூறப்படுகிறது. இதனால், கோல்கட்டா துறைமுகத்தில், ஏராளமான இறால் சரக்குப் பெட்டகங்கள் தேங்கியுள்ளன.

**வர்த்தக அமைச்சகம்:**நிலைமை மோசமாவதை உணர்ந்த மத்திய வர்த்தக அமைச்சகம், சென்னையில் வரும் 27ம் தேதி அவசர கூட்டம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்துள்ளதாக தெரிகிறது.இதில்,கடல் உணவுபொருட்கள் துறைசார்ந்த அமைப்புகள், ஏற்றுமதியாளர்கள், இறால் பண்ணையாளர்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப் படுகிறது.

மேலும், வர்த்தக அமைச்சகம் சார்பில், உயர்மட்ட குழு ஒன்று, விரைவில் டோக்கியோ சென்று, இந்த பிரச்னைக்கு தீர்வு காணும் முயற்சி மேற்கொள்ளும் என தெரிகிறது. ஜப்பானை தொடர்ந்து, அமெரிக்கா, ஐரோப்பா உள்ளிட்ட நாடுகளிலும், இந்திய இறால் களுக்கான தேவை குறைந்துள்ளது. இத்தகைய போக்கால், சர்வதேச சந்தையில், இறால் களின் விலை, கடந்த

இரண்டு, மூன்று வாரங்களில் 25 - 30 சதவீதம் குறைந்துள்ளது.

நடப்பு 2012-13ம் நிதியாண்டில், ஏப்ரல் - ஜூன் வரையிலான முதல் காலாண்டில், நாட்டின் ஒட்டுமொத்த கடல் உணவுப் பொருட்கள் ஏற்றுமதி, அளவின் அடிப்படையில் 1.31 லட்சம் டன்னாகவும், மதிப்பின் அடிப்படையில் 2,700 கோடி ரூபாயாகவும் குறைந்துள்ளது. இது, சென்ற நிதியாண்டின், இதே காலத்தில், முறையே 1.65 லட்சம் டன் மற்றும் 2,870 கோடி ரூபாய் என்ற அளவில் உயர்ந்து காணப்பட்டது.

வளர்ச்சி:ஆக, மதிப்பீட்டு காலத்தில், கடல் உணவுப் பொருட்கள் ஏற்றுமதி, அளவு மற்றும் மதிப்பின் அடிப் படையில், முறையே 20 சதவீதம் மற்றும் 5 சதவீதம் குறைந்துள்ளது.இதே காலத்தில், கடல் உணவுப் பொருட்கள் ஏற்றுமதி, டாலர் மதிப்பில் 20 சதவீதம் குறைந்து 64.50 கோடியில் இருந்து, 51.50 கோடி டாலராக சரிவடைந் துள்ளது.சென்ற 2011-12ம் நிதி யாண்டில், கடல் உணவுப் பொருட்கள் ஏற்றுமதி, அளவின் அடிப்படையில் 6.02 சதவீதமும், ரூபாய் மதிப்பின் அடிப்படையில் 28.65 சதவீதமும் வளர்ச்சி கண்டிருந்தது என்பது குறிப் பிடத்தக்கது.

**நாளை விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 27,2012,06:39 IST

கருத்தை பதிவு செய்ய

திருவள்ளூர் : திருவள்ளூர் மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம், வரும் 28ம் தேதி, செவ்வாய் காலை 11 மணியளவில், கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் நடக்கிறது. கலெக்டர் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில், மாவட்டத்தில் உள்ள வேளாண்மை, தோட்டக்கலை, வருவாய், மின்வாரியம், கூட்டுறவு உள்ளிட்ட வேளாண் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டு விவசாயிகள் குறைகளுக்கு தீர்வு காணஉள்ளனர்.இந்த வாய்ப்பினை விவசாயிகள் பயன்படுத்தி, கூட்டத்தில் கலந்து கொண்டு பயன் பெறுமாறு, திருவள்ளூர் கலெக்டர் ஆஷிஷ்சட்டர்ஜி கேட்டுக் கொண்டு உள்ளார்.

**தென்னை விவசாயிகளுக்கு கோவையில் பயிற்சி அளிப்பு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 27,2012,04:12 IST

கருத்தை பதிவு செய்ய

ராசிபுரம்: வேளாண்மை விரிவாக்கம் மையம் சார்பில், அட்மா திட்டத்தின் கீழ், ராசிபுரம் அடுத்த நாமகிரிப்பேட்டை யூனியனுக்கு உட்பட்ட, 25 தென்னை விவசாயிகளுக்கு, வேப்பங்குளம்

தென்னை ஆராய்ச்சி நிலையத்தில் பயிற்சி அளிக்கப்பட்டது.அங்கு, தென்னை சாகுபடி தொழில் நுட்பங்கள், மரத் தோப்பு அமைத்தல், தென்னை இடை வெளியில் தேனீ வளர்த்தல், தென்னை டானிக் செயல் விளக்கம், நாற்றுகள் பராமரிப்பு, ஊடுபயிராக கோகோ, வாழை, மூலிகை பயிர்கள் மற்றும் பசுந்தாழ் உரமிடுதல் குறித்தும் விளக்கம் அளித்தனர்.பூச்சியியல் துறை பேராசிரியர் கணேசன், மண்ணியியல் துறை பேராசிரியர் மோகன்தாஸ் ஆகியோர் பயிற்சி அளித்தனர். நாமகிரிப்பேட்டை அட்மா திட்ட தொழில் நுட்ப மேலாளர் சந்திரசேகரன் மற்றும், 25க்கும் மேற்பட்ட தென்னை விவசாயிகள் உள்பட பலர் பங்கேற்றனர்.

அட்மா திட்டத்தின் கீழ், வேளாண் பொறியியில் துறை சார்பில், தொழில் நுட்ப பயிற்சிக்காக, 20 விவசாயிகள், கோவை வேளாண் பல்கலைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். தென்னை மரம் ஏறும் கருவி, காய் பறிக்கும் இயந்திரம், நெல் நடவு இயந்திரம், களை எடுக்கும் கருவி, மார்க்கர் கருவி, மஞ்சள் அறுவடை இயந்திரம், குப்பை எடுக்கும் இயந்திரம் ஆகியவற்றின் செயல்பாடுகள் குறித்து விளக்கப்பட்டது.நாமக்கல் வேளாண் உதவி பொறியாளர் மணி, வட்டார தொழில் நுட்ப மேலாளர் சந்திரசேகரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**நீலகிரியில் தேசிய தோட்டக்கலை இயக்கம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 27,2012,07:35 IST

கருத்தை பதிவு செய்ய

ஊட்டி:நீலகிரி மாவட்டத்தில் தேசிய தோட்டக்கலை இயக்கத்தை செயல்படுத்த 1 கோடியே 32 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.நீலகிரி மாவட்ட தோட்டக்கலை இணை இயக்குனர் மோகன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:ஊட்டி, குன்னூர், கோத்தகிரி மற்றும் கூடலூர் வட்டாரங்களில் தேசிய தோட்டக்கலை இயக்கம் 1 கோடியே 32 லட்சத்து 98 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட உள்ளது. பரப்பு அதிகரித்தல் திட்டத்தின் கீழ், கூடலூர் வட்டாரத்துக்கு வாசனை திரவி பயிர்களுக்கு, அதாவது இஞ்சி சாகுபடி செய்ய எக்டருக்கு 12,500 ரூபாய் மானியம் வழங்கப்பட உள்ளது.இதில், 7,500 ரூபாய் மதிப்புள்ள நடவு பொருளும், 2,500 ரூபாய் நிலம் தயார் செய்தலுக்கு பணமாகவும், 2,500 ரூபாய் மதிப்புள்ள இஞ்சி சாகுபடிக்கு தேவையான இடுபொருட்கள் வழங்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.100 எக்டர் பரப்பில் இஞ்சி சாகுபடி செய்ய மானியமாக 12.50 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கிராம்பு, ஜாதிக்காய் மற்றும் மிளகு பயிர் பரப்பு அதிகரித்தலுக்கு, எக்டருக்கு 20ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கப்பட உள்ளது.இவ்வாண்டு 35 எக்டர் பரப்பளவுக்கு 7 லட்சம் ரூபாய் மானியம்

வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.நீலகிரி மாவட்டத்தில் உயர்தர பசுமை குடில்கள் அமைக்கும் திட்டத்தின் கீழ், 25 ஆயிரம் சதுர மீட்டர் பரப்பளவுக்கு திட்டமிடப்பட்டுள்ளது. சதுர மீட்டருக்கு 325 ரூபாய் மானியம் வழங்கப்பட உள்ளது. 1000 சதுர மீட்டர் பரப்பளவில் பசுமைக்குடில் அமைக்கும் விவசாயிக்கு 3.25 லட்சம் ரூபாய் மானியம் கிடைக்கும்.மண்புழு உரம் தோட்டக்கலை பயிர்களுக்கு இடும்பொழுது மண்ணில் பயிர்களுக்கு நன்மை செய்யும் பாக்டீரியா மற்றும் பூஞ்சான்களின் எண்ணிக்கை அதிகரிப்பதுடன் நோய் எதிர்ப்பு தியுடன் பயிர்கள் நன்கு வளர்ந்து நல்ல மகசூல் கிடைக்கும்.
மண்புழு உரம் இடும் பொழுது மண்ணின் தன்மை மற்றும் நீர்பிடிப்பு தன்மை அதிகரிப்பதுடன் விதை முளைப்பு தன்மை செடி வளர்ச்சி மற்றும் வேர் வளர்ச்சியை அதிகரிக்க செய்யும்.நிரந்தர மண்புழு உரக் கூடாரம் அமைக்கும் விவசாயிகளுக்கு மானியமாக 30 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும். இவ்வாண்டு 5 நிரந்தர மண்புழு உரக் கூடாரத்துக்கு மானியம் வழங்கப்படும். தோட்டக்கலை பயிர்களில் மகரந்த சேர்க்கை துணை புரிய தேனீ வளர்க்க விருப்பமுள்ள விவசாயிகளுக்கு தேனீ பெட்டி, தேனீக்கள் மற்றும் தேன் எடுக்கும் உபகரணங்கள் வாங்க மானியம் வழங்கப்படுகிறது. ஒரு தேனீ பெட்டிக்கு 800 ரூபாய் மானியமும், ஒரு தேனீ காலனிக்கு 700 ரூபாய் மானியமும், தேன் எடுக்கும் உபகரணங்கள் வாங்க 7,799 ரூபாய் மானியமும் வழங்கப்படுகிறது.தோட்டக்கலை பணிகளை இயந்திர மயமாக்கல் திட்டத்தின் கீழ், இயந்திரங்கள் வாங்க விவசாயிகளுக்கு 17,500 ரூபாய் மானியம் வழங்கப்படும்.எனவே, இத்திட்டங்களை பற்றி அறிய உங்கள் பகுதி வேளாண்மை உதவி அலுவலர் அல்லது தோட்டக்கலை அலுவலரை அணுகி விரிவான விபரங்கள் பெறலாம். மேலும், ஊட்டி, குன்னூர், கோத்தகிரி மற்றும் கூடலூர் பகுதியில் அமைந்துள்ள வேளாண்மை விரிவாக்க மையங்களையோ அல்லது தோட்டக்கலை உதவி இயக்குனர்களையோ அணுகி விபரங்களை பெற்று பயனடையலாம். இவ்வாறு மோகன் கூறியுள்ளார்.

**மரக்கன்று நடும் திட்டத்தில் முறைகேடு? நடவடிக்கைக்கு விவசாயிகள் வலியுறுத்தல்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 27,2012,05:57 IST

கருத்தை பதிவு செய்ய

பெரம்பலூர்: பெரம்பலூர் மாவட்டத்தில், மரக்கன்று நடும் திட்டத்தில் நடந்துள்ள முறைகேடுகள் குறித்து, விசாரணை மேற்கொண்டு சம்பந்தப்பட்ட நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென அனைத்து விவசாயிகள் சங்கம் சார்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது.இதுகுறித்து விவசாய சங்க பிரதிநிதிகள் செல்லதுரை, ராஜசிதம்பரம், வேணுகோபால், ராஜேந்திரன், வரதராஜன், ராமலிங்கம் ஆகியோர் பெரம்பலூர் கலெக்டர் தரேஷ்அஹமதுவிடம் அளித்துள்ள மனுவில் தெரிவித்துள்ளதாவது:தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் 64வது பிறந்த நாளையொட்டி,

மாவட்டம் முழுவதும் மரம் கன்றுகள் நடும் திட்டத்தை செயல்படுத்த இரண்டு லட்சம் மரக்கன்றுகள் வனத்துறை மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஒரு மரக்கன்று நடவுசெய்ய 34 ரூபாய் வீதம் இரண்டு லட்சம் மரக்கன்றுகளுக்கு 68 லட்சம் ரூபாயும், மூன்று மாதங்கள் மாதங்கள் தண்ணீர் விட்டு பராமரிக்க 12 ரூபாய் வீதம், இரண்டு லட்சம் மரக்கன்றுகளுக்கு 24 லட்சம் ரூபாயும் என, மொத்தம் 92 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது.மரக்கன்று நடும் திட்டத்துக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட 92 லட்சம் ரூபாய் கடந்த மார்ச் மாதம் வனத்துறை மூலம் செலவழிக்கப்பட்டுள்ளது.

ஆனால் இதுவரை எந்ததெந்தப் பகுதியில் எவ்வளவு மரக்கன்றுகள் நடப்பட்டது என்ற தகவல் தெரிவிக்கவில்லை. எனவே, இத்திட்டத்தில் முறைகேடு நடந்திருக்கலாம். இதுகுறித்து, விவசாய சங்க பிரதிநிதிகள் மற்றும் வருவாய் துறையினர் அடங்கிய குழு ஒன்றை கலெக்டர் அமைத்து ஆய்வு மேற்கொண்டு, அதனடிப்படையில் வனத்துறை மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.இதேபோல பெரம்பலூர் மாவட்டத்தில் சமூக காடு வளர்ப்பு திட்டத்தின் கீழ், அனைத்து ஏரிகளிலும் கருவேல மரக்கன்றுகள் நடப்பட்டு, மரம் வளர்ந்த உடன் அந்தந்த பஞ்சாயத்தின் மூலம் ஏலம் விடப்படுகிறது. ஏலம் விடப்பட்டு எட்டு மாத காலத்துக்குள் ஏலம் எடுத்தவர் கருவேல மரங்களை வெட்டி எடுத்துக்கொள்ள வேண்டும். தவறினால் சட்டப்படி ஏலம் ரத்து செய்யப்பட்டு, மறு ஏலம் நடத்த வேண்டும். ஆனால் செஞ்சேரி, நெய்குப்பை, நக்கசேலம், ஆய்குடி உட்பட 20க்கும் மேற்பட்ட கிராமங்களில் உள்ள ஏரிகளில், கருவேல மரங்கள் கடந்த 27-12-10 அன்று ஏலம் விடப்பட்டு மரங்கள் அனைத்தையும் கடந்த 31-8-11ம் தேதிக்குள் வெட்டி எடுத்திருக்க வேண்டும். ஆனால் இதுவரை மரங்கள் வெட்டி எடுக்கப்படவில்லை. எனவே சட்டப்படி ஏலத்தை ரத்து செய்து மறு ஏலம் விட்டிருக்க வேண்டும்.ஆனால் கடந்த ஜூன் மாதம் ஏரியில் உள்ள மரங்களை வெட்டி எடுக்க ஏலம் எடுத்தவர்களுக்கு, சமூக காடுகள் வனச்சரகர் அனுமதி அளித்துள்ளார். என வே, இது தொடர்பாக உரிய விசாரணை மேற்கொள்ள வேண்டும்.

**விவசாயிகளுக்கு பயிர்கடன் நிலத்தின் அடிப்படையில் வழங்க வேண்டும்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 27,2012,05:01 IST

கருத்தை பதிவு செய்ய

எட்டயபுரம்: விவசாயிகளுக்கு பயிர்கடன் நிலத்தின் அடிப்படையில் வழங்க வேண்டுமென தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் தாலுகா குழு வலியுறுத்தியுள்ளனர்.தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் எட்டயபுரம் தாலுகா குழு கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு ஆதிமூலம் தலைமை வகித்தார். மாநிலகுழு உறுப்பினர் லெனின்குமார், மாவட்ட செயலாளர் நல்லையா மற்றும் பலர் பேசினர். தாலுகா செயலாளர் கிருஷ்ணமூர்த்தி வேலை அறிக்கை சமர்ப்பித்தார். தீர்மானங்கள் :

தூத்துக்குடி மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டும். போர்கால அடிப்படையில் ஏரி, குளங்கள், கால்வாய்கள் தூர்வார வேண்டும். உரவிலை உயர்வை ரத்து செய்ய வேண்டும். உரமானியம் விவசாயிகளுக்கு வழங்க வேண்டும். நிலமோசடி தடுத்து நிறுத்த வேண்டும். தீய்ந்து போன நெல் வாழை, வெற்றிலை பயிர்களுக்கு ரூ.10 ஆயிரம் நஷ்ட ஈடு வழங்க வேண்டும். எட்டயபுரம் தாலுகா விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணமாக நஷ்டஈடு ரூ.5 ஆயிரம் வழங்க வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது. கோரிக்கையை வலியுறுத்தி எட்டயபுரத்தில் ஆகஸ்டு 28ல் ஆர்ப்பாட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டது. தாலுகா குழு குருசாமி ரவீந்திரன், அழகர்சாமி, வெங்கடசாமி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

தினகரன்

துவரை சாகுபடியை ஊக்குவிக்க மானியம்

பதிவு செய்த நேரம்:2012-08-27 09:54:27

கரூர், : துவரை சாகுபடியை ஊக்குவிக்க மானியம் வழங்கப்படுகிறது என்று கரூர் மாவட்ட கலெக்டர் ஷோபனா தெரிவித்துள்ளார்.இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது,

கரூர் மாவட்டத்தில் சென்ற ஆண்டைவிட 1.5 மடங்கு அதிகமாக பயறு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. 100 சதவீத மானியத்துடன் கூடிய 150 பாசன கருவிகள் ரூ.28.46 லட்சத்தில் பெறப்பட்டுள்ளது. நடப்பாண்டு பயறு வகை பெருக்கத்திற்காக நடவு முறையில் துவரை சாகுபடி 114 எக்டேரில் செயல் விளக்கத்திடல்கள் அமைக்க எக்டேருக்கு ரூ.15 ஆயிரம் மானியத்தில் ரூ.13.8 லட்சம் வழங்கப்பட்டுள்ளது. துவரை சாகுபடியை ஊக்குவிக்க 601 எக்டேருக்கு ரூ.7500 வீதம் ரூ.45.08 லட்சம் மானியமாக வழங்கப்பட்டிருக்கிறது.துவரை சாகுபடியை அதிகரிக்க எக்டேருக்கு ரூ.5 ஆயிரம் வீதம் 200 எக்டேருக்கு 50 சதவீத மானியத்தில் ரூ.10 லட்சம் நிதி தரப்பட்டுள்ளது. எண்ணெய் பனை சாகுபடியை ஊக்குவிக்க 100 எக்டேர் பரப்பிற்கு மானியமாக ரூ.43.62லட்சம் நிதி வழங்கப்பட்டுள்ளது.

கரும்பு சாகுபடி 200எக்டேரில் பயிரிட நுண்ணீர் பாசன திட்டம் மூலம் 75சதவீதம் மானியம் வழங்கப்படும். இதுதவிர ஒரு பருகரணை சீவல் முறையில் எக்டேருக்கு ரூ.12,500 மானியம், நீரில் கரையும் உரம் எக்டேருக்கு ரூ.12,500 என மொத்தம் ரூ.25ஆயிரம் வீதம் ரூ.50 லட்சம்

வழங்கப்படும். விவசாயிகள் இதை பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இவ்வாறு கலெக்டர் ஷோபனா தெரிவித்துள்ளார்.